# சங்க இலக்கியத்தில் கருப்பொருளும் பெண்நிலைச் சிந்தனையும் - சூழலியல் பார்வை

# The Theme of Feministic Perspectives - A Study on ecological view as portrayed in Sangam Literature

**முனைவர் பி.அனுராதா,** உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, KPR கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கல்லூரி, அரசூர், கோவை-641407

**Dr P.Anuradha**, Assistant Professor, Department of Tamil, KPR college of Arts Science and Research, Arasur, Coimbatore-641 407

**DOI: 10.5281/zenodo.60749934**

## Abstract

The fundamentals of human life is always related to mother nature. In other words, nature is interconnected with life and literature. Recent researches highly focuses on the theme of nature and it's contemporary theories, namely eco-criticism. In this regard, it is important to note that Sangam literature clearly explicates the associated living of humans with nature. In Tamil culture, it is considered as the equal to the concept of ecology and eco-criticism. This study helps us to understand the benefits of associated living of humans with nature.Considering the limitations of the research, the feministic perspectives of Sangam women poets in relation with nature is taken as the main theme of this study.

## ஆய்வுச்சுருக்கம்

மனித வாழ்வின் அடிப்படைக் கூறுகள் எப்பொழுதுமே இயற்கையை மையமாகக் கொண்டே இயங்கும். அத்தகு இயற்கை, வாழ்வியலோடும் இலக்கியத்தோடும் இரண்டறக் கலந்தது. இயற்கையை மய்யமாகக் கொண்டு இன்று பற்பல கோட்பாட்டு ஆய்வுகள் பெருகி வருகின்றன. மனிதனின் இயற்கையோடு இயைந்த வாழ்க்கையை சங்க இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. தமிழ்ச் சூழலில் சூழலியல் கோட்பாட்டிற்கு இணையாக தொல்காப்பிய திணைக்கோட்பாடு திகழ்கிறது. இந்தப் புரிதல் இயற்கைக்கும் மனிதனுக்குமான உறவைச் சுட்டுகிறது. மனித வாழ்வின் அடிப்படையாம் கருப்பொருள் குறித்து நோக்குவதன் பயனாய் மனித வாழ்வியலில் இயற்கையின் பங்களிப்புகளையும் அறிந்துகொள்ள ஏதுவாக அமையும். பக்கவரைவைக் கருத்தில் கொண்டு பெண்புலவர் தம் பாக்களில் வெளிப்படுத்தும் கருப்பொருள் குறித்து மட்டுமே ஆய்விற்கு எடுத்தக்கொள்ளப்பட்டுள்ளது. சூழலியல் கோட்பாட்டில் தற்போது பெரிதும் பேசப்படுகிற பெண்நிலைச் சிந்தனையை முன் வைத்து இவ்வாய்வின் செல்நெறி அமைகிறது.

**Keywords:** சூழலியல், முப்பொருண்மை, பெண்நிலைச் சிந்தனை, இயற்கை மய்யச் சிந்தனை, Abiotic, Biotic.

## முன்னுரை

தனது அதிகார எல்லைக்குப் போரிடுகிற ஆண் தனது இருப்பிற்காகப் போரிடுகிற பெண் என்ற இரு எதிரிடைகளுக்குமான சூழலியல் போராட்டம் சங்க இலக்கியத்தில் தென்படுகிறது.

நிலவு, அழகு, இயற்கை என அழகியலோடு எழுதுவதெல்லாம் சூழலியலில் சேராது. ஆனால் சூழலியல் இவை அனைத்தும் இழையோடித்தான் இருக்கும். இத்தகு சூழலை உணர்ந்த பெண் படைப்பாளிகள் தங்கள் படைப்புலகில் இயற்கைக்கான இடத்தை நிறுவுகின்றனர். யானை, குதிரை, சிங்கம், புலி, மான், குரங்கு, அணில், காகம், வண்டு என உயிர் வாழ்வனவற்றையும் பூ, தாவரங்கள், மரங்கள், பஞ்சபூதங்கள் எனப் பிறவற்றையும் தன் இயற்கை மய்யச் சிந்தனைக்குள் புனைகின்றபெண், முப்பொருண்மைகளையும் இயற்கையின் பாற்பட்டே கவிதை புனைந்தமை அறியலாகிறது. அந்த வகையில் பெண்நிலைச் சிந்தனையை முன் வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**பெண்நிலை குறித்தத் திறனாய்வுகளும் அதன் போக்குகளும்**

உலகெங்கிலும் பெண்ணியம் குறித்த பார்வை பெருகியுள்ள இன்றைய சூழலில் பெண் தன்னிலை உணரப் பாடுபடும் திறனாய்வுகளும் அத்தகு திறனாய்வின் வழி பெண் அடைய வேண்டிய ‘இடம்’ குறித்தும் தமிழ்ச்சூழலில் ஆராய்வது முக்கியமாகின்றது. தன்னிலை உணராத தன்னை, தன்னுடல் சார்ந்த அறிவில்லாத பெண் ஆணாதிக்கத்திற்குள் அதிகார வட்டத்தின் எல்லைக்குள் தானாகவே சென்று அகப்பட்டுக் கொள்கிறாள். இதைத் தவிர்க்கவே இத்தகுத் திறனாய்வுகளும் அதன் உண்மைகளும் தேவைப்படுகின்றன. பெண்மை, பெண்ணியம், பெண்ணியல்பு போன்ற சொற்கள் பயன்பாட்டில் இருப்பினும் இவற்றின் மையப்புள்ளி ‘பெண் நிலை’யையே சாரும் என்பதால் இவ்வாய்வில் பெண் நிலை குறித்துப் பேசப்படுகிறது. எனினும் இவ்வாய்வின் மூலம் ‘சூழலிய நோக்கு’ என்பதால் இங்கு பெண்நிலையோடு அனிச்சையாகவே பங்கு பெறும் எனலாம்.

பொதுவாகவே வேறு எந்த இலக்கியப் படைப்பை விடவும் வீரியமிக்க வார்த்தைகளைக் கொண்டது கவிதை. இத்தகு கவிதைகளைத் திறனாய்வு செய்வதன் வழியாகப் படைப்பாளியின் கருத்துப் பின்புலம் எத்தகையது அல்லது அதற்கான சமூகத் தேவை எதுவாகிறது என்பதை அறியலாம். மனித குல வரலாற்றில் பெண் பற்றிய பொதுப்பார்வை அவளை இன்னும் பின்னுக்குத் தள்ளுகிறது. பெண்மை, கற்பு என்ற கற்பிதங்கள் அவளுக்கான பாதுகாப்பான சிறையை ஏற்படுத்தி விடுகிறது. இந்நிலையில் தன்னை உணர்ந்த அல்லது உணர இலக்கியப் படைப்பாளி முயலுகிறாள். இவ்வகைப் படைப்பினூடாகச் செயல்படுகிற கொள்கைகளையும் பெண்நிலை சார்ந்த திறனாய்வுகளையும் ஆய்வதன் மூலம் பெண்ணின் தனித்த அடையாளத்தையும் இவ்வகைக் கோட்பாடுகளினூடாகப் பயணிக்கிற சூழலியப் பெண்நிலைச் சிந்தனையையும் வரையறை செய்ய முடியும் எனலாம்.

**இயற்கை மய்யச் சிந்தனை**

“Eco is the short of ecology, which is concerned with the relationships between living organism in their natural environment as well as their relationships with that environment”1 என்கிற மேலைநாட்டவரின் கொள்கைகள் நம் இலக்கியச் சூழலுக்குப் புதியதல்ல. இயற்கையுடனான தொடர்போடு மனிதன் வாழுதலே சூழலியல் என்றும் அதனுடைய இயல்போடு அதனை ஏற்று வாழ்தலும் சூழலியலே என்றும் கருதுகிற மேலைநாட்டார். வெறும் இயற்கைப் (Natural) பேசுவதுமட்டும் சூழலியல் ஆகாது எனவும் கருதுகின்றனர். அவை இயற்கைக் கவிதைகளாக ‘Natural Poems’ ஆக மட்டுமே திகழும் என்கின்றனர். உயிர்/உயிரற்ற அனைத்தும் அதனதன் இயங்கு வெளியில் இயல்பாகச் செயல்பட அனுமதித்தலும் அவற்றின் சுதந்திரம்

பேணப்படுதலும் சூழலியல் தான் என்கிற இவர்களது கொள்கையும் பெண்நிலைச் சிந்தனையை மய்யப்படுத்தியதே எனலாம். ஆனால் இவ்வகைச் சிந்தனை என்பது (சூழலியல் சார்ந்து) அன்பும், தாய்மையும் நிறைந்த பெண்ணுக்குச் சாத்தியமாதலைச் சங்கப்பாக்கள் புலப்படுத்தியிருத்தல் என்பது சங்கச் சான்றோரின் சூழலியல் சிந்தனையின் உச்சகட்டம் எனலாம்.

இயற்கை பற்றி கவிதை எழுதுதலும் இயற்கைச் சூழலைக் கவிதையாக்குவதும் வேறு என்கிற புரிதல் வேண்டும் இந்தத் தெளிவின்மை (ambiguity) என்பது இலக்கிய ஆராய்ச்சியில் தவறான முடிவுகளைத் தர வழி வகுத்துவிடும். எனவே இயற்கை குறித்து எழுதுவதும் இயற்கையான சூழலைக் குறித்து எழுதுவதற்கமான தெளிவு அவசியமாகிறது. இயற்கையை மையப்படுத்திய பெண்/ஆண் புலவர்களின் போக்குகள் அவரவர் இயல்பிலேயே அமைந்தது சங்க இலக்கியத்தின் தனித்துவமாகும்.

**கருப்பொருளாவது,**

**“தெய்வம் உணாவே மாமரம் புள் பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறிவுங் கருவென மொழிப” 2 (தொல் - 18)**

முதற்பொருளாம் நிலத்தில் உறையும் தெய்வம், உணவு, விலங்குகள், மரங்கள், பறவைகள், பறை, யாழ் உள்ளிட்ட இசைக் கருவிகள் போன்றவை கருப்பொருள் எனப்படும்.

மனித வாழ்விற்குத் துணையாகவும் பகையாகவும் விளங்கக்கூடிய இவற்றை நோக்குவதன் மூலம் மனிதவாழ்வின் அடிப்படைப் பண்புகளைப் பெற முடியும். தன்னைச் சார்ந்து வாழ்ந்த உயிரினங்களுக்கு அவன் செய்த நன்மை தீமை, அவற்றைப் பற்றிய அவனது அறிவு போன்றவற்றை அறிவதன் மூலம் பண்டைய ‘சூழலிய’ அறிவு பெறப்படும். அதிலும் குறிப்பாக உணர்ச்சிவசப்படக்கூடிய பெண் அல்லது உணர்வுபூர்வமான பெண் புலவர்கள் தங்கள் கவிதைகளைக் கையாள்வதன் நோக்கத்தைப் பெற முடியும். இவ்வகைக் கருப்பொருட்கள் காலத்திற்கு, இலக்கியத்திற்கு ஏற்ப மாறுபட்டு விளங்குகிறது. ஏனெனில் ஒரே தன்மைதாய் இவை நிலைத்துவிட முடியாது கால இட மாற்றத்திற்கு ஏற்ப இவை மாறுபடலாம் என்பதால், “காலகட்ட மாற்றத்திற்கேற்ப ஏற்படும் இடமாற்றத்தையொட்டி கருப்பொருளை மறு வரைவு செய்தல் வேண்டும்”3 என்கிற கருத்தை உள்வாங்கிக் கொள்ள வேண்டும்.

திணைக்கோட்பாட்டை உள்வாங்கிக் கொண்டு தற்போதைய கால இட சூழலுக்கேற்ப இலக்கியத்தில் ஏற்படும் மாற்றத்தை ஆராய்ந்து அதன் அடிப்படையில் புதிய கொள்கைகளும் கோட்பாடுகளும் வளர்வதே இலக்கியத்திற்கும் படைப்பாளிக்குமான வெற்றியாக அமையும் எனலாம். எனவே, பெண் புலவர்களின் ‘முதல், கரு, உரிப்பொருள் சிந்தனை’ குறித்த ஆய்வு சூழலியப் பெண் நிலை சிந்தனை என்கிற இக்கொள்கைக்கு முன்னோட்டமாக அமையும் எனலாம். நிலமும் பொழுதும் முதற் பொருள். அது சார்ந்த உணர்வுகள் உரிப்பொருள் என்பதனால் மற்ற அனைத்தையும் கருப்பொருளுள் கொண்டு செல்வதாய் அமைகிறது இவ்வாய்வு. இங்கு கருப்பொருளாவது

1. உயிருள்ள 2. உயிரற்ற

இருதன்மைத்தாய் பிரிக்கப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. ‘வெப்ஸ்டர்’ அகராதியில் சூழலியல் என்பதற்கு “உயிரினங்களுக்கும் சுற்றுப்புறச் சூழல் நிலைகளுக்கும் இடையே

நிலவக்கூடிய ஒட்டுமொத்தமான உறவு முறைகள்” என்று விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லாப் பொருட்களும் உயிர் வாழ்வான (Biotic Components), உயிர் வாழ முடியாத அல்லது உயிரற்ற அங்கங்கள் (Abiotic Components) ஆகிய இரண்டும் பெரும் பிரிவுகளில் வகைப்படுத்தப்படுகின்றன.

எனவே, இப்பாகுபாட்டின் அடிப்படையில் பெண் தன் நிலை குறித்த சிந்தனையை வெளிப்படுத்த ஆக்கபூர்வ துணைகளாய்த் திகழ்ந்தவற்றை எடுத்தியம்புவதாய் இவ்வாய்வு அமைகிறது. முறையே தெய்வம், உணவு, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் எனச் சொல்லப்பட்டவற்றினையும் அது தவிர்த்த பிற கருப்பொருட்களையும் காண்பது அவசியமாகிறது. இவற்றின் உயிருள்ள/உயிரற்ற எனப் பிரிப்பின் தெய்வம், மா, புள்/உணவு, பறை, செய்தி, யாழ் ஒருபுறமும் பிரிக்கப்படும்; எனினும் இவற்றோடு இயைந்த பிறவும் சேர்த்து நோக்க வேண்டும் என்பது தற்போதைய தேவையாகின்றது.

**உயிருள்ளவற்றினூடான (Biotic) பெண் நிலைச் சிந்தனை**

தெய்வம் என்ற கருப்பொருளுட் பிரிவில் பெண் கொண்டாடுகின்ற ஆற்றல் வாய்ந்த மாபெரும் சக்தி ‘அணங்கு’ ஆகும். இவ் அணங்கு சங்கப் பெண் புலவர்களின் ‘அதீத ஆற்றலாக’ உணரப்படுகிற தெய்வம் எனலாம். சங்கப் புலவர்கள் பொதுவாகவே அரசியல் அறிவோடு அறிவியல் அறிவும் மிக்கவர்களாக இருந்தனர். காலம் - அதற்கேற்ற தட்பவெப்பம் - அதற்கேற்ற உணர்வு நிலை, அதற்கேற்ற உணவு, தொழில், உடை என வாழ்ந்தமை சங்க இலக்கியத்தின் மாண்புகளில் ஒன்றாகும். இயற்கையோடு இயைந்த வாழ்வு, நிலத்தோடு இயைந்த மக்கள், மக்களோடு இயைந்த பிற உயிரினங்கள் என்ற இவற்றின் தொடர் வெற்றியே இன்றும் நாம் போற்றுகிற சங்க இலக்கியத் திணைக் கோட்பாடாகத் திகழ்கிறது. இதை, “Normally nature gives life to human society. At this occasion, Sangam literature gives life to nature, because Sangam literature is the tribute of nature” 4 என்பதால் அறியலாம். மேலும்,

**“கன்றும் உண்ணாது கலத்தினும் படாது**

**………………………………………**

**திதலை அல்குல்என் மாமைக் கவினே” 5 (குறு – 27)**

என்ற பாடலில் நல்ல பசுவின் பால் கன்றும் உண்ணாமல் கறக்கும் பாத்திரத்திலும் விழாமல் வீணே மண் தரையில் வீழ்ந்தது போல எனது மேனியழகு எனக்கும் பயன்படாமல் என் தலைவனுக்கும் பயன்படாமல் வீணே பசலை நோயுற்றது என்பது இப்பாடலின் விளக்கம். வீணான தன் உணர்வை ஒப்பிடத் தலைவி மேற்கொண்ட எடுத்துக்காட்டு “கன்று பால் உண்ணுதல்” என்பதாகும். (அல்குல்-அடிவயிறு) இக்குறிப்புகள் சூழலியலை மய்யப்படுத்துவது அறியலாகிறது. இப்பாடலுடன் தொடர்பு படுத்திப் பார்க்க மற்றொரு பாடலும் உண்டு அதாவது, நற்றிணை பத்தாவது பாடல்,

**“அண்ணாந்து ஏற்றிய வனமுலை தளரினும்**

**…………………………………………**

**நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்” 6 (நற்.பா-10)**

அண்ணாந்து ஏந்திய மார்பை உடையவள் தழுவலுக்கு உரியவளில்லை இவள் என்பதாக அமைகிறது. அதாவது, மார்புப் பகுதி என்பது காமம் முளைவிடுகின்ற பகுதியாதலால் ‘கன்று பாலுண்ணுதலை’ ஒப்புமைப்படுத்தவும் ‘அண்ணாந்து எந்திய மார்பு’ எனப் புறந்தள்ளப் படுதலுக்கான காரணத்தை அலசுகிற பெண்ணுக்கு, தன்னுறு வேட்கை கிளர்ந்து எழுதலைக் காண இயலும். இதை வெளிக்கொணர தன் உடல் உறுப்புக்களின் வெம்மையை வெளிப்படுத்தினாள் என்பதும் புலனாகும்.

**சூல்**

சங்கப்பாக்களில் அதிலும் குறிப்பாக பெண்பாற் புலவர்களின் பாக்களில் “சூல்” குறித்த செய்தி பரவலாகக் காணப்படுகிறது.

**“அடும்புகொடி சிதையவாங்கி, கொடுங்கழிக்**

**……………………………………….**

**கணவன் ஓம்பும் கானல்அம் சேர்ப்பன்,”7 (அகம் - 160)**

என்ற பாடலில் பெண் ஆமை இட்ட முட்டையை ஆண் ஆமை பாதுகாக்கும் என்ற செய்தி பெறப்படுகிறது. பெண் உயிராற்றலாக பிரபஞ்சத் தோற்றத்திற்கு காரணமாக விளங்குகிறாள். அதைப் பாதுகாக்க வேண்டிய கடமை ஆணுக்கு உள்ளது. அழிவு சக்தியாகவும் இயற்கையின் பேரியக்கத்திலிருந்து மாறுபடுபவனாகவும் அவன் இருந்தால், பிரபஞ்சம் அழிவிற்குள்ளாகும் என்பது மறைபொருளாகிறது. மேலும், தான் ஈன்ற கன்றினைத் தழுவிக் கொண்டு பெண் யானை நிற்கிறது. ஆண் யானையைப் புலி கொன்றது. அதனால் தழுவத் துணையின்றி நின்கிற அந்தப் பெண்யானை தன் குட்டியைத் தழுவி நின்றது என்கிற பொருளமைந்த பாடலில்,

**“பெருங்களிறு உழுவை சுட்டெடன, இரும்பிடி**

**……………………………………..**

**அரும்புண் உறுநரின் வருந்தி வைகும்.”8 (நற் - 47)**

‘தாய்மையைக் கொண்டாடுதல்’ புலப்படுகிறது. தன் துணை நீங்க தனக்குத் தானே ஆறுதலாய் குழவியைத் தழுவி நிற்கிற அந்தப் பெண் யானையின் மனோதிடம் சூழலியப் பெண் நிலைச் சிந்தனைக்கு சிறந்த சான்று பகர்கின்றது.

**உயிரற்றவற்றினுடான (Abiotic) பெண்நிலைச் சிந்தனை**

பொதுவாகவே பெண் என்பவள் தன்னைச் சுற்றியுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற அனைத்து பொருட்களுடனும் தொடர்பு கொண்டவளாகிறாள். பெண் தன்னை அவற்றினூடாக வெளிக்காட்டவோ சற்று புறமிருந்து சில வேளைகளில் ரசிக்கவும் செய்கிறாள். தன்னை அழகியல் இன்பத்தைக் காட்டி புனைவு செய்வதை வெறுத்து, தன் உடல் இத்தகையது, உணர்வு இத்தகையது என்பதைப் புலப்படுத்தி நிற்கிறாள். முழுக்க முழுக்க இயற்கையைக் கொண்டாட அவள் எடுத்துக் கொள்கிற எத்தனிப்பு நிலை வெளிக்கொணரப்படுகிறது. அதில் அவளது முதல் முயற்சி மழை, மலை, மரம், இசை/ஒலி, கடல், வயல் என அனைத்தையும் கொண்டாடுகிறாள்.

மரம் பெண்ணின் வளமைக்கு உதாரணம் ஆதல் பற்றி, ஔவையார் அகநானூற்று பாடல் ஒன்றில், நாணில் பெருமரம் என்று ‘நாணம் அற்ற தன்மை’ மரத்திற்கு பெரிய வடிவைத் தந்தது.

அம்மரம் 'பரவிப் பேசும் பழிச்சொல்' போல மலர்களைச் சொறிந்தது என்பதாய் அமைந்துள்ளது நோக்குதற்குரியதாகும். மரம் என்பது மனித உயிரை போன்றே உயிருள்ளவற்றின் வகையில் எண்ணுகிறபாங்கு சூழலியலார் பார்வையில் தென்படுகிறது. "A tree has not only physical dimensions, but also a non-physical climension"9 என்பதை கவனிக்க வேண்டும். அதாவது சூழலிய பெண் நிலைச் சிந்தனையாக இன்று முன்னிறுத்தப்படுகிற கொள்கையின் அடிப்படை என்பதை பெண் தன்னைப் போலவே பிற/மற்றவற்றையும் பார்க்கிற தன்மை என்றும் குறிப்பிடலாம். 'மரம்' உயிருள்ளது என்கின்ற தன்மை 'புன்னை மரம் என் தங்கைக்குச் சமம்' என்கிற சங்கப் பெண் புலவரின் சொல்லிலும் புலப்படுகிறது.

**மழை, நீர், மேகம்**

மழை, நீர், மேகம் எனக் குறிப்பிடும் இவை, காதலன் வரவை, காம நுகர்வை எடுத்தியம்புவதாய் நிற்றலைக் காணலாம். பெண்ணுக்கும் நீருக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு தனது குருதியைத் தாய்ப்பால் ஆக்கி, அதைத் தன் கருப்பை நீரில் உயிர் பெற்ற குழந்தைக்கு அவளது பண்பும் நீரின் பண்பும் ஒன்றுதான். 'நீரின்றி உலகு எவ்வாறு அமையாதோ? அதேபோல பெண்ணின்றி அமைவதும் கடினமே. எனவே நீர் - உயிர்த் தோற்றத்தின் ஊற்றுவாயாகக் கருதுகிறாள். இது அறிவியல் பூர்வமான ஒன்று கூட. மேலும், காமம் மிகுந்த வேளையைக் குறிப்பிடுகையில் 'அணை உடைவது போல' காமம் வெளிப்பட்டு விடும் என்கிற அவளது எச்சரிக்கை அது தன்னுறு வேட்கையை தீர்க்காத/தணிக்காத பொழுது காமம் நில்லாதே வெளிப்படும் என்று மிரட்டுவதால் அமைகிறது. **(அகம் - 369) (குறு –பா– 99)**

**மலை**

மலை பிறர் கொள்ள தாங்கள் யாருமின்றித் தவித்ததை பாரிமகளிர் குறிப்பிடுதல் மலையைத் "அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்" தம் உணர்வுபூர்வ உரிமையைச் சுட்டலாக வெளிப்படுவது அறியலாகிறது. அதாவது உயிரற்றவற்றினுடனான பெண்ணின் தொடர்பு தன் உரிமையை நிலைநாட்டல், உணர்வுகளை எடுத்தியம்பல் என்ற நிலையில் வெளிப்படுவதைக் காண்கிறோம்.

ஒரு போதும் தொடர்பில்லாத வேற்று நாட்டு வேந்தர்க்கு நம் நாடு சொந்தமாகி விட்டதை எண்ணி வருத்தமுறுகிறாள் பெண் (அங்கவை/சங்கவை) இதை, "வாழ்வதற்கான விருப்பம், சாவதற்கான விரும்பம் (Desite to live and Desire to die) என்ற இரண்டுக்குமிடையில் இந்தச் சாவு விருப்பமானது, இந்தமண்ணுக்குச் சொந்தமில்லாதவர்களால் இந்த மண் ஆளப்பட்டுவிடக் கூடாது. அப்படி ஒரு நிலை வந்தால் என்ற வரலாற்றுப் பூர்வமான கற்பனை அவருக்குள் பயத்தை உருவாக்கிவிடுகிறது." என்ற ஔவையின் மன அலசலோடு ஒப்பிட்டுப் பார்த்தல் இங்கு அவசியமாகின்றது. தன் நாடு, மலை பிறர்கொள்ள அந்த உரிமை பறிபோகிற நிலையில் அவளது வருத்தம் மேலோங்குகிறது. இயற்கையால் இயல்பாய் வாழ்தல் என்பது தனக்கு உரிமையுடைய நிலத்தின் தான் நிகழும் என்கிற பெண்நிலைச் சிந்தனை பெறப்படுகிறது, ஒலி, ஆரவாரம், இடி போன்ற ஓசைகள் சார்ந்த பாக்கள் அடிவயிறு குறித்த பாக்கள், திதலை, பசலை குறித்த பாக்கள், தாவரங்கள் குறித்த பாக்கள், காட்டாறு, அருவி, குன்று, கடல், மலர்கள் என உயிருள்ள பொருட்களுடனான பெண் புலவர்களது தொடர்பு நீண்ட வரிசையில் செல்கிறது.

உயிருள்ள உயிரற்றவற்றின் வாழ்விடமும் அதற்கான சூழலியல் சார்ந்து அமையும் என்பதும் அவை, ஒன்றோடொன்று சார்ந்து வாழக் கூடியவை என்றும் மேலை நாட்டவர் கருதுகின்றனர்.

மண்ணால் புனையப்பட்ட ஒன்றாகவே மனித உயிரினம் இருக்கிறது என்பது ஒருபாலரின் கூற்று (பைபிளை முன்னிறுத்தி) உயிருள்ளவற்றின் ஆதிக்கம் உயிரற்றவற்றின் மீது செயல்படுகிறது என்றும் அத்தகு ஆதிக்கமே சூழலியலைப் பற்றிய அறிவியலையும் அதிகாரம் பற்றிய புரிதலையும் முன்வைக்கிறது என்றும் ஒரு பிரிவினர் கருதுகின்றனர். இதை "Nature writing shows regard for the non-human and privileges "eco – consciousness" Over "ego – Consciousness"10 என்பது கருதத்தக்கது. தன் / மண் மீதான ஆணின் அதிகாரம் என்பது அவனது அதிகார வலிமையை நிலைநாட்டுவதாயும் பெண் தன் மலைக்காக இரங்கிப்பாடுவது என்பது தனக்கு உரிமையுடைய மலையைப் பிறர் ஆதிக்கம் செலுத்துதல் என்ற நிலையிலும் "ego – Consciousness" என்ற கொள்கையை எடுத்தியம்புவதைக் காணலாகும்.

**"People have yelt that man is in but not or nature ,or but not quite in nature,or in any case, that he is a very special part of nature."** அதாவது மனிதன் இயற்கைப் பொருட்களில் கலந்துள்ளான்.ஆனால் இயற்கைப் பொருளல்ல என்கிற இக்கூற்று இங்கு கவனிக்கத் தக்கது. **part of nature** என்பதை அவனது உள்ளம் ஏற்க மறுத்து **special part of nature** என்று தன்னெழுச்சி மிக்கதாய் உருவகித்து தன்னை நிலைநிறுத்த எத்தனிக்கிற அதிகாரம் செயல் படலாகிறது. இயற்கைக்கும் மனிதனுக்குமான தொடர்பை வெறும் அழகியல் பார்வையில் காணாமல், அத்தகு தொடர்பு (சூழலியல் அழிவினால்) துண்டிக்கப்படும் அச்சுறுத்தலையும் அவள் முன் வைக்கிறாள். இயற்கை பற்றி கவிதை எழுதுதலும் இயற்கைச் சூழலைக் கவிதையாக்குவதும் வேறு என்கிற புரிதல் வேண்டும் இந்தத் தெளிவின்மை (ambiguity) என்பது இலக்கிய ஆராய்ச்சியில் தவறான முடிவுகளைத் தர வழிவகுத்துவிடும். எனவே இயற்கை குறித்து எழுதுவதும் இயற்கையான ஆழலைக் குறித்து எழுதுவதற்கமான தெளிவு அவசியமாகிறது. இயற்கையை மையப்படுத்திய பெண்/ஆண் புலவர்களின் போக்குகள் அவரவர் இயல்பிலேயே அமைந்தது சங்க இலக்கியத்தின் தனித்துவமாகும்.

தனது அதிகார எல்லைக்குப் போரிடுகிற ஆண் தனது இருப்பிற்காகப் போரிடுகிற பெண் என்ற இரு எதிரிடைகளுக்குமான சூழலியல் போராட்டம் சங்க இலக்கியத்தில் தென்படுகிறது. நிலவு, அழகு, இயற்கை என அழகியலோடு எழுதுவதெல்லாம் சூழலியலில் சேராது. ஆனால் சூழலியல் இவை அனைத்தும் இழையோடித்தான் இருக்கும். இத்தகு சூழலை உணர்ந்த பெண் படைப்பாளிகள் தங்கள் படைப்புலகில் இயற்கைக்கான இடத்தை நிறுவுகின்றனர்.

யானை, குதிரை, சிங்கம், புலி,மான், குரங்கு, அணில், காகம், வண்டு என உயிர் வாழ்வனவற்றையும் பூ, தாவரங்கள், மரங்கள், பஞ்சபூதங்கள் எனப் பிறவற்றையும் தன் இயற்கை மையச் சிந்தனைக்குள் புனைகிறபெண், முப்பொருண்மைகளையும் இயற்கையின் பாற்பட்டே கவிதை புனைந்தமை அறியலாகிறது. தலைவனைக் காண ஏங்கினாலும், தலைவனை மறுத்தாலும் இயற்கையைக் கொண்டாடுதலை மறக்காத பெண்நிலையும்இ இயற்கை மீதான பேரச்சத்தை உண்டு பண்ணி நீ பாதுகாக்கப்பட வேண்டியவள் என்று பெண்ணின் மீதான அதிகாரத்தைச் செலுத்துகிற ஆண்நிலையும் சங்கப் பாக்களில் தென்படுகின்றன. பெண்ணுக்குப் பெண்ணே சமூக விதிகளை ஏற்றுமாறுபடுகிற தன்மையும் பெறப்படுகிறது. தன்னுணர்வு வெளிப்பாட்டிற்குப் பெண் கையாளுகிற இயற்கையை அதன் சூழலை தனக்கான மொழியாகக் கொள்ளுதலும் புலப்படுகிறது.

முட்டை, உழவு, தேன், சூல், மகரந்தச்சேர்க்கை, நீர், மழை, இடி, ஒலி, ஒளி, காட்டாறு, காடு, அருவி, சுனை, மலைச்சாரல், நிலவு, கிழங்கு, கடல், குன்று, வயல், மேகம், கோடைகள், கானல் நீர், காற்று, வேப்பம்பழம், கள்ளிக்காடு, ஓணாண் நிமித்தம், சேவல், பூனை, யானை, புலி, காக்கை, கன்று, பசு, மீன் கிணறு, பாறை, பூந்தாது, குளம், மலர், பாலைநிலம், காலம், மயில், மூங்கில்புதர், பறை, வின்மீன்இ வானம், இருள், நெல்லிக்கனி, பிறகனிவகைகள், யாழிசை, நெற்கதிர், யானைக்கவளம், குகைகள், விண்ணுலக/வானவர் உலகு, புல், புள் என அனைத்தையும் தன் கவிதையில் புலப்படுத்துகிற பெண்ணின் கவிதையாக்கத்தில் இவைகளது முக்கிய பங்கே சிறப்பானதாகும்.

**முடிவுரை**

தன் உயிராற்றலை வெளிப்படுத்துகிற பெண் புலவர்களின் இயற்கை சார் ஆளுமை புலனாகிறது. மேலும் வௌவால், பறவைகள், யானைகள், மான், புலி, ஆமை, பசு என அனைத்து உயிரிகளின் தன்மையையும் விளக்கி அதன் வழி பெண் நிலைச் சிந்தனை சூழலியப் பார்வையாய் அமைவதை எடுத்தியம்புகின்றனர் பெண்புலவர்கள். கவிதையின் வாயிலாக தனது கருத்துகளை முன்வைக்கவும், பிற உயிர்களிடத்தான தனது அன்பை வெளியிடுகிற பாங்கு, கற்பனை உலகைத் தாண்டிய (உண்மை) யதார்த்தத்தை வெளியிடும் தைரியம் என்று அவளது எழுத்து உருக்கொள்கிறது. மனித இயற்கைஇ உலகியல் இயற்கை என்ற உறவு நிலையை பொதுமைப் பொருண்மைக்குள் உட்புகுத்தி அதைத் தன் எழுத்தில் நிலைநாட்டுகிற செயல்தன்மை விளங்கலாகிறது. இந்தச் செயல் தன்மைதான் பரந்துபட்ட உலகியல் கண்ணோட்டத்தை பெண் ஏற்கிற அல்லது மறுக்கிற இடமாகவோ அல்லது தன்னை/தன்னிருப்பை நிலைநாட்டுகிற எத்தனிப்பாகவோ அமைவதைக் காண்கிறோம்.

**துணை நின்ற நூல்கள்**


1. சுப்பிரமணியன்,ச, வே, சங்க இலக்கியம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, மணிவாசகர் நூலகம், சென்னை – 600017, முதற்பதிப்பு – 2010
2. அய்யப்ப பணிக்கர். கெ, இந்திய இலக்கியக் கோட்பாடுகள், மொழியாக்கம் – மனோகரன், சூழல் - பொருத்தம், சென்னை – 15, பதிப்பு – 2012
3. சீனிச்சாமி. துரை, திணைக்கோட்பாடு, நீயூ செஞ்சுரிபுக் ஹவுஸ்,சென்னை– 600 098, முதற்பதிப்பு–மே. 2016
4. செல்வி திருச்சந்திரன், பெண்நிலைவாதமும்கோட்பாட்டு முரண்பாடுகளும், ஒரு சமூகவியல் நோக்கு (The Dilema of Theories A Feminist Perspective), பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம். முதற்பதிப்பு – ஜீன் -1998.
5. பஞ்சாங்கம் க, பெண்மொழி படைப்பு, மணி ஆப்செட், சென்னை– 600 024, முதற்பதிப்பு – 2007
6. பாமயன், திணையியல் கோட்பாடுகள், தடாகம் வெளியீடு, முதற்பதிப்பு -2012


**Refences**


1. The primary source is the association literature (Feminist poets)

2. **Subramanian, S. W,** Sangam Literature Eights, Ten, Maniwasakar Library Chennai – 600017, First Edition – 2010
3. **Ayyappa Panicker,** KE Indian Literary Principles, **Translation – Manokaran** Environment - Match, Chennai – 15, Edition – 2012
4. **Seenisami. E,** Departmental Theory, New Century Book House, Chennai– 600 098, First Edition – May. 2016
5. **Thiruchandran**, A Sociological Perspective on Feminism and octrinal Contradictions, Institute for the Study of Women's Education. First Edition - Jean-1998.
6. **Almanac IGE** - Feminine work, Hours offset, Chennai– 600 024, First Edition – 2007
7. **Bamayan** - Departmental Theories, Lake Release, First Edition-2012
8. **Cheryll Gloteflity, ed., Horold Fromm**, ed., T.he Ecocriticism Reader. Landmarks in Literary Ecology, University Georgia Press. 1996
9. **Nirmal Selvamoni, Nirmaladasan, Rayson K Alex**, Essays in Ecocriticism ,sarup & son's, New Delhi.


**தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்**


**அனுராதா. பி " சங்க இலக்கியத்தில் கருப்பொருளும் பெண்நிலைச் சிந்தனையும் - சூழலியல் பார்வை"** புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 2, இதழ் 1, சனவரி 2022, பக். 21-29


**Cite this Article in English**


**Anuradha. P " The Theme of Feministic Perspectives - A Study on ecological view as portrayed in Sangam Literature"** Pulam: International Journal of Tamilology Studies, Vol.2 Issue 1, January 2022, pp. 21-29